# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,387 — 1938 ம் ஞூ ஆவணிமீ 12 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

L. D.—B. 1/37

**1924 ம் ஆண்டின் 9 ம் இலக்க, கிராமச் சங்கச் சட்டம்.**

1924 ம் ஆண்டின், 9 ம் இலக்க, கிராமச் சங்கச் சட்டத்தின் 95 ம் பிரிவினுலும் இலங்கை இராச்சிய மந்திரசபை சம்பந்தமாக 1931 ம் ஆண்டின் ஆலோசனைச் சபையிற் செய்த கட்டளையின் 93 ம் அபிசத்தினுலும் தம்மிது வைக்கப்பட்ட தத்துவங்களின் பலத்தைக்கொண்டு தேசாதிபதியவர்களால் உண்டாக்கப்பட்ட விதி.

உத்தமனரவர்கள் கட்டளைப்படி,
ஜே. சீ. ஹோவார்ட்,
நியாயப்பிரமாண விஷய காரியாதிகாரி.

1938 ம் ஞூ ஆவணிமீ 5 ந் உ.

### விதானம்.

1927 ம் ஞூ பெப்ருவரி (மாசி)மீ 18 ந் தேதியைக்கொண்ட 7,568 ம் இலக்கக் கெசெற் பத்திரிகையிற் பிரசித்தப்படுத்தப்பட்டு, 1937 ம் ஞூ ஜனுவரி (தை) மீ 29 ந் தேதியைக்கொண்ட 8,269 ம் இலக்கக் கெசெற் பத்திரிகையிற் பிரசித்தப்படுத்தப்பட்ட விதானத்தினுல் திருத்தப்பட்ட கிராமக் கோடுகளிலும் கிராமக் காரியஸ்தர் சபைகளிலும் கைக்கொள்ளப்படவேண்டிய, கிறிமினல் வியவகார முறை விதானங்கள் பின்வருமாறு இதனுல் இன்னும் திருத்தப்படுகின்றன :—

(1) 31 ம், 34 ம், 36 ம் விதானங்களுக்குத் தனித்தனியே பதிலாக பின்வரும் புதிய விதானங்களை வைத்துக்கொள்ளுதல் வேண்டும் :

"31. ஓர் எதிரி அல்லது ஒரு சாட்சிக்காரன் ஒரு கிராமக் கோட்டு நீதவானுக்கு அல்லது அக்கிராசனருக்குமுன் ஒரு பிடிவிருந்திற் கொண்டுவரப்படும்போது ; அல்லது (*b*) ஒரு முறைப்பாடுகாரன் அல்லது ஓர் எதிரி தெண்டம் கொடுக்கும்படி நியமிக்கப்பட்டிருக்குமிடத்து, கிராமக் கோட்டு நீதவான் அல்லது அக்கிராசனர் தெண்ட மிறுப்பதற்கு அவருக்குத் தவணைகொடுப்பது ஏற்றதென்று எண்ணும்போது ; அல்லது (*c*) வெளிப்படுத்தப்பட்ட அடாத்து பாரதூரமானதென்றும் அதைக் குறித்து ஒரு பொலீஸ் நீதிபதிக்கு அறிவித்தல் கொடுக்க வேண்டுமென்றும் காணப்படும்போது, கிராமக் கோட்டு நீதவான் அல்லது அக்கிராசனர் முக்கிய பாகத்தளவில் I ம் அட்டவணையிலுள்ள "D" அக்ஷர மாதிரிப்படியான ஒரு பிணைச்சீட்டை அல்லது நல்லொழுக்கக் கட்டுப்பாட்டை, அக்கிராமக் கோட்டு நீதவானுடைய அல்லது அக்கிராசனருடைய நற் கருத்தின்படி, பிணைகாரரோடுகூட அல்லது பிணைகாரரில்லாமல்—

(1) ஒரு குறித்த தேதியில் கிராமக் கோட்டின்முன் அல்லது கிராமக் காரியஸ்தர் சபைமுன் வந்து தெரிபடுவதற்கு ;

(2) தெண்டமிறுப்பதற்கு நியமிக்கப்பட்ட நாளில் அத்தெண்டத்தை இறுப்பதற்கு ; அல்லது

(3) அந்நல்லொழுக்கக்கட்டுப்பாட்டில் நியமிந்த காலத்துக்குள் அந்நீதிபதிமுன் வந்து தெரிபடுவதற்கு :

முடித்துக் கொடுக்கும்படி அவரைக் கேட்கலாம்.

அந்நல்லொழுக்கக்கட்டுப்பாட்டின் தொகை 50 ரூபாவுக்கு மேற்படப்படாது.

. . . . . . . . . .

34. (1) 1924 ம் ஆண்டின் 9 ம் இலக்க, கிராமச் சங்கச் சட்டத்தின் 80 (2)ம் பிரிவிற் சுட்டிய விருந்து முக்கிய பாகத்தளவில் I ம் அட்டவணையிலுள்ள "G" அக்ஷர மாதிரிப்படியானதாயிருத்தல் வேண்டும.

(2) 1924 ம் ஆண்டின் 9 ம் இலக்க, கிராமச் சங்கச் சட்டத்தின் 80 ம் பிரிவிற் சுட்டிய பிணைச் சீட்டினுற் கட்டுப்பட்ட எவனையும் அந்தப் பிரிவின் (4) ம் உட்பிரிவின்படி மறியலிருக்கும்படி தீர்ப்பதற்காக கிராமக் கோட்டு நீதவான்முன் அல்லது அக்கிராசனர்முன் வந்திருக்கச் செய்வது அவசியமாயிருக்கும் எந்த விஷயத்திலும் ஒரு சித்தார்க் கட்டளையை அல்லது விருந்தை, தமது நற்கருத்தின்படி, விடுப்பது கிராமக் கோட்டு நீதவானுக்கு அல்லது அக்கிராசனருக்கு நியாயமுறையாகும்.

. . . . . . . . . .

36. ஒரு கிராமக் கோட்டின் அல்லது கிராமக் காரியஸ்தர் சபையின் அல்லது ஒரு கவண்மேந்து ஏஜன்றின எந்தத் தீர்மானத்திற்கேனும் கட்டளைக்கேனும் தண்டனைத் தீர்ப்புககேனும் மாருக 1924 ம் ஆண்டின் 9ம் இலக்க, கிராமச் சங்கச் சட்டத்தின் 84 (1) ம் பிரிவின்படி அல்லது 87 (1) ம் பிரிவின்படி ஓர் அப்பீல் முறையீடு செய்யப்பட்டிருக்கும் போது, அவ்வப்பீல் முறையீடு செய்யும் திறத்தவர் சித்தார்க் கட்டளை ஒப்புவிப்பதற்கு விதிக்கப்பட்ட வண்ணமாக ஒப்புவிக்கப்பட்ட எழுத்துமூலமான அறிவித்தலால் கிராமக் கோட்டு நீதவானுல் அல்லது அக்கிராசனரால் அவருக்கு அறிவிக்கப்பட வேண்டிய ஒரு தேதியிலன்று கிராமக் கோட்டின்முன் அல்லது கிராமக் காரியஸ்தர் சபைமுன் வந்து தெரிபடுவதற்கும் அவ்வப்பீல் முறையீட்டிற் செய்யப்பட்ட கட்டளையைக் கைக்கொண்டொழுகுவதற்குமான நிபந்தனைக் கமைந்து முக்கிய பாகத்தளவில் I ம் அட்டவணையிலுள்ள "D" அக்ஷர மாதிரிப்படியான ஒரு பிணைச்சீட்டை அல்லது நல்லொழுக்கக் கட்டுப்பாட்டை, கிராமக் கோட்டு நீதவான் அல்லது அக்கிராசனர் கட்டளையிடலாகும் பிரகாரம் பிணைகாரரோடுகூட அல்லது பிணைகாரரில்லாமல், முடித்துக் கொடுத்தாலன்றி மற்றப்படி அவ்வப்பீல் முறையீடு அத்தீர்மானத்தை, கட்டளையை அல்லது தண்டனைத் தீர்ப்பை நிறைவேற்றுவதைத் தடுக்கமாட்டாது. அந்நல்லொழுக்கக் கட்டுப்பாட்டின் தொகை என்ன விஷயத்திலும் 50 ரூபாவுக்கு மேற்படப்படாது. மேலும், அப்பீல் முறையீட்டில் கட்டளை கொடுக்கப்பட்டதின் மேல், அப்பீல் முறையீடு செய்த திறத்தவருக்கு விதிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பை நிறைவேற்றும் பொருட்டாக, வந்து தெரிபடும்படி அவ்வப்பீல் முறையீடு செய்த திறத்தவரைக் கட்டாயம்பண்ணுவதற்கு ஒரு விருந்து விடுப்பதும் கிராமக் கோட்டு நீதவானுக்கு அல்லது அக்கிராசனருக்கு நியாயமுறையாகும்."

(2) I ம் அட்டவணையில் விவரித்திருக்கும் " G " அக்ஷர மாதிரிப் பத்திரத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய மாதிரிப்பத்திரத்தை வைத்து கொள்ளுதல் வேண்டும் :—

" G அக்ஷர மாதிரிப் பத்திரம்.

**அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைப் பிடித்து விற்பதற்கான விருந்து.**

சிறிமினெல் நியாயாதிகாரம் } ———— கிராமக்கோட்டு (அல்லது காரியஸ்தர் சபையில்).

இலக்கம் :— ——

இராசாவும் மறு பக்கமாக ———— ம்.

———— மாகாணத்துப் பிஸ்கால் அவர்களுக்கு.

———— ம் ஸு ————மீ —— ந் தேதியிலன்று மேற்சொல்லிய ———— என்பவர் உடன்பட்டு முடித்துக் கொடுத்த பிணைச் சீட்டின் அல்லது நல்லொழுக்கக்கட்டுப்பாட்டின் நிபந்தனைகளை மீறினதற்காக மேற்சொல்லிய ———— என்பவரால் எங்கள் மேலான அதிபர் இராசா அவர்களுக்குக் கொடுபடவேண்டிய தெண்டத் தொகையாகிய ———— ரூபாவை மேற்சொல்லிய ———— என்பவருக்குரிய வீடுகள், காணிகள், பொருட்கள், கடன்கள், பாவுகள் ஆகியவைகளைப் பிடித்தும், வேண்டுமானும், விற்றும் திரட்டிச் சேர்ந்த அப்பணத்தை மேற்சொல்லிய எங்கள் அதிபர் இராசா அவர்களுக்கு ஒப்புவிக்கும்படியாக 19 —— ம் ஸு ————மீ —— ந் தேதியிலன்று இந்தக் கிராமக் கோட்டின் முன் (அல்லது காரியஸ்தர் சபைமுன்) வைத்திருக்கக் கடவீர். மேலும், இவ் விருந்து அதிகாரத்பத்திரத்தையும் அவ்விடத்தில் உம் வசத்தில் வைத்துக்கொள்ளக்கடவீர்.

19 —— ம் ஸு ————மீ —— ந் உ.

கிராமக்கோட்டு நீதவான்
அல்லது (அக்கிராசனர்)."

## காணி நிர்ணய முன்னறிவித்தலைக் குறித்த விளம்பரம்.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நொம்பர் 1,862 (கேகாலை).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1938 ம் ஸு (ஆகஸ்ட்) ஆவணிமீ 12 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியனசெய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1938 ம் ஸு (ஜுலை) ஆடிமீ 4 ந் தேதியிலன்று கேகாலைக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

ஆர். அலுவிஹாரே,
உதவி அரசாட்சி ஏஜன்ற.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரத்தைக் கேகாலை உதவி அரசாட்சி ஏஜன்று அவர்களிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

சப்பிரகாம மாகாணம், கேகாலை டிஸ்திறிக், பெலிகல்கோறளை காட்டுப்பிற்றபற்று வடக்கு அற்றுகொட கிராமத்திலிருக்குங் காணித்துண்டுகளாவன :—

பிரதமபடம் ஏ 184.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|
| 1 | டலுக்கலெமுக்கலான .. .. | 11 | 3 | 5 |
| 2 | ஷை .. .. .. | 0 | 0 | 9 |
| | | 11 | 3 | 14 |

எல்லைகளாவன :—வடக்கு-ஏச். சமருவும் மற்றோரும் உரித்தாடும் வறலெற்றென்னவும் ஏச். பீ. செண்டியா உரித்தாடும் வறலெற்றென்னவும் ;

கிழக்கு-ஏச். பீ. செண்டியாவும் மற்றோரும் உரித்தாடும் மியனகலொமடெகேன பீ. செற்றியும் மற்றோரும் உரித்தாடும் கொடமடிற்றெகேன பீ. செற்றியும் மற்றோரும் உரித்தாடும் கினெலெகேன ;

தெற்கு-பீ. செற்றியும் மற்றோரும் உரித்தாடும் கினெலெகேன ;

மேற்கு-கெப்பிற்றிகேனஎல, எல். எம். பீ. கிறிமேனிகாவும் மற்றோரும் உரித்தாடும் கெப்பிற்றிகேன ஏச். பபானிசாவும் மற்றோரும் உரித்தாடும் டிக்கோவிற்றெகேன.

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஸு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மீகம்மனப் பள்ளிக்கூடத்துக்கும் கிணற்றிற்கும் அதுக்குப்போகப் பாதைக்கும் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 488. குறிச்சி—வல்போலதேனியாவும் வியனமுல்லவும்.

| துண்டு. | காணியினது பெயர். | விடரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | சியம்பலககாஹின்னேவத்தை | 15-20 வயதுள்ள 35 கொக்கோமரங்களும் 4 வயதுள்ள 4 கமுகு மரங்களுமுள்ள கொக்கோ தோட்டம் | உடவெல மீககாகெதற முடியான்செ, மீகம்மன, வத்தேகம | 0 | 0 | 7·7 |
| 2 | கொற்றெகொடவத்தை .. | 20 வயதுள்ள 4 கொக்கோமரங்களும், சீமேந்தாற் கட்டப்பட்ட துரவுடன்உள்ள ஒரு சீமேந்தாற் கட்டப்பட்ட கிணறும் அடங்கிய கொக்கோத் தோட்டம் | எம். ஓமர்டீன் ஆராச்சிவத்தெகெதற, கட்டுக்காஸ் தோட்டை | 0 | 0 | 2·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1938 ம் ஸு (செப்டம்பர்) புரட்டாதி மாசம் 7 ந் தேதியிலன்று முற்பகல் 8 மணிக்கு வத்தேகம பொலிஸ் ஸ்ரேஷனில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1938 ம் ஸு (ஒகஸ்ட்) ஆவணிமீ 8 ந் உ.

எச். சீ. கொக்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு, கண்டி.

———

1876 ம் ஸு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பெல்லெப்பிற்றியாப் பள்ளிக்கூடத்துக்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 506. குறிச்சி—பெல்லெப்பிற்றியா.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | அஸ்வெட்டுமேவத்தை .. | 20 வயது றப்பர் .. | பெல்லெப்பிற்றியா சமரசூரிய ஜயவீரரத்தின .. | 1 | 0 | 0 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1938 ம் ஸு (செப்றெம்பர்) புரட்டாதி மாசம் 15 ந் தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு உலப்பனைப் பள்ளிக்கூடத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1938 ம் ஸு (ஆகஸ்ற்) ஆவணிமீ 8 ந் உ.

எச். சீ. கொக்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு, கண்டி.

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் டொன்டிரு சுகாதார சங்கத்துக்கு தேள்வையான என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 635. குறிச்சி—டொன்டிரு மேற்கு.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கொப்பருகேவத்த .. | வெறுநிலம் .. | டொன்டிரு மேற்கில் இருக்கும், எஸ். ஆர். கே. டனேறிஸ் அப்பு .. | 0 0 1·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1938 ம் ஸ்ரீ (செப்டம்பர்) புரட்டாதி மாசம் 6 ந் தேதியிலன்று காலை 9.30 மணிக்கு மாத்தறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தறைக் கச்சேரி,
1938 ம் ஸ்ரீ (ஆகஸ்ற்) ஆவணிமீ 9 ந் உ.

எஸ். டீ. குமாரசுவாமி,
சேர்க்கப்பட்ட உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் டிக்வெலேயிலுள்ள தமிழ் பள்ளிக்கூடத்தைப் பெருப்பித்தல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 636. குறிச்சி—டிக்வெல்ல (முஸ்லீம் தெரு.)

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பறணகொடவத்தை .. | 80 வயதுள்ள 5 பலாமரங்களைக் கொண்ட தோட்டம் | டிக்வெலேயிலுள்ள கே. மம்மான், ஏ. ஆர். எம். அப்துல் மஜீதும், ஏ. எல். எம். இபிருஹீம் | 0 0 29·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1938 ம் ஸ்ரீ (செப்டம்பர்) புரட்டாதி மாசம் 8 ந் தேதியிலன்று காலை 9 மணிக்கு டிக்வெலேக் கிராமக்கோட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தறைக் கச்சேரி,
1938 ம் ஸ்ரீ (ஆகஸ்ற்) ஆவணிமீ 9 ந் உ.

எஸ். டீ. குமாரசுவாமி,
சேர்க்கப்பட்ட உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் அரசாட்சியாரால் தாபரிக்கப்படும் இகலவிற்றியவிலுள்ள பள்ளிக்கூடம் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 617. குறிச்சி—இஹலவிற்றிஎலவும் பிற்றக்கற்றுவெனவும்.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பட்டக்கொலேயமுல்சேனே .. | 40 வருஷம் சென்ற சிற்றெனெல்லாமரம், 30 வயதுள்ள ஒரு தென்னைமரம், 20 வயதுள்ள 2 பேடி தெல் மரங்கள், ஒரு மண் கிணறும் கல்லால்கட்டியதும் ஓலையால் வேயப்பட்ட ஒரு கட்டடமும் | இகலவிற்றியலேக்கேவிலில்உள்ள உயன்வத்தை குணரத்ன தேரோ | 1 1 17·5 |
| 2 | பொல்கள்தேக்கவத்தை .. | 40 வயதுள்ள சிற்றேனெல்லா .. | கறகொட உயன்கொடை விகாரை ஆராச்சியார் டி. டி. டபிள்யு. கமபத்திரனை | 0 0 6·9 |
| 3 | பாவிப்பிலில்லாத டி. ஆர் சீ. றேரட்டு | 12 வயதுள்ள சில சிற்றெனெல்லாப் பத்தைகள் .. | ஷெ .. | 0 0 18·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1938 ம் ஸ்ரீ (செப்டெம்பர்) புரட்டாதி மாசம் 9 ந் தேதியிலன்று காலை 8 மணிக்கு இகலவிற்றியாலைப் பள்ளிக்கூடத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தறைக் கச்சேரி,
1938 ம் ஸ்ரீ (ஆகஸ்ட்) ஆவணிமீ 9 ந் உ.

எஸ். டீ. குமாரசுவாமி,
சேர்க்கப்பட்ட உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் அரன்வெலாவில் ஓர் பாடசாலை என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

முடிந்த கிராமப்படம் இல. 291 அனுபந்தம் 6. குறிச்சி—காஹவத்தை.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 197 | இன்கினிகாஹேன .. | தோட்டம் அதில் ஐந்து வருஷம் தொடக்கம் 15 வருஷம் சென்ற 20 தென்னையும், 5 வருஷம் சென்ற 3 எலுமிச்சையும், 15 வருஷக் கணக்குள் உள்ள 19 முருங்கையும், 2 வருஷம் சென்ற 2 பப்பா மரமும், 1 மூங்கில் பத்தையும், ஓர் ஓடுபோட கட்டிடமும், ஓர் சிறு குடிசை (கக்கூஸ்)யும் உண்டு. | ஜே. டீ. நாணயக்கார, அறன்வெலா .. | 0 1 37·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1938 ம் ஆண்டு (செப்டம்பர்) புரட்டாதி மாசம் 14 ந் தேதியிலன்று பிற்பகல் 2.30 மணிக்கு தங்காலை வாடி வீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அம்பாந்தோட்டைக் கச்சேரி,
1938 ம் ஆண்டு (ஆகஸ்ட்) ஆவணிமீ 3 ந் உ.

டபிள்யு. ஹோ.ம்ஸ்
உதவி அரசாட்சி ஏசண்டு.

———

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கொழும்பு-கண்டி ரேட்டின் 45 ம் 45¼ ம் கட்டைகளிற்கிடையேயுள்ள ரேட்டோரம் அழியாது பாதுகாப்பதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 200. குறிச்சி—கலிகொமுவ.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | பலலெடெணியெகடிக்கும்புற .. | வயல் .. | கே. ஏ. பெருட் பெரேரு, கலிகமுவ, உ. ஏ. டிங்கிரி அப்புஹாமி, தெல்பத்தெனிய | 0 0 33·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1938 ம் ஆண்டு (செப்ரெம்பர்) புரட்டாதி மாசம் 3 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு கேகாலைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலைக் கச்சேரி,
1938 ம் ஆண்டு (ஆகஸ்ட்) ஆவணிமீ 6 ந் உ.

ஆர். அனுவிஹாரெ,
உதவி அரசாட்சி ஏசண்டு.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.